நீதிநூற்றிரட்டு விருத்தியுரை 7-ம் பாகம்.

உ

சங்கச் செய்யுள்.

மதுரைத்தமிழாசிரியர்மகனார்

பூதஞ்சேந்தனார்செய்த

இனிது நாற்பது

மூலமும்,

மஹாவித்வான் கா. இராமசாமி நாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

விருத்தியுரையும்.

இவை

பென்ஷன் சுபேதார் - தஞ்சை. சாம்பசிவம்பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை - எஸ். குமாரசுவாமிப்பிள்ளையால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1909.

Copyright] விலை அணா 2. [Registered.

கடவுள் துணை.

இனிது நாற்பது

மூலமும் உரையும்.

வெண்பா.

கண்மூன் றுடையா னடிசேர் கடிதினிதே
தொன்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்த லினிது.

பதவுரை. மூன்று கண் உடையான் - மூன்று கண்களை யுடையவனாகிய சிவபெருமானது, அடி - திருவடியை, சேர் - அடைதல், கடிது இனிது - மிகவுமினிதாம்; தொல் - பழமையாகிய, மாண் - மாட்சிமைப்பட்ட, - துழாய் மாலையானை - துளவமாலையை யணிந்தவனாகிய திருமாலை, தொழல் - வணங்குதல், இனிது - இனிதாகும், முந்துற - முற்பட, நான்கு முகம் உடையானை - நான்கு முகங்களை யுடையவனாகிய பிரமதேவனை, பேணி - விரும்பி, சென்று அமர்ந்து ஏத்தல் - போயிருந்து துதித்தல், இனிது - இனிதாகும். எ-று.

கருத்துரை. திரிமூர்த்திகளையும் வணங்குதல் இனிதென்பதாம்.

விசேடவுரை. கண் மூன்று என்பதனைப் பொருளியைபுக் கேற்ப மூன்றுகண் என முன்பின்னாக மாற்றிக்கொள்ளலாயிற்று. முகநானகு என்பதனையு மிவ்வாறே. சோ - முதனிலைத் தொழிற் பெயர். கண்மூன்று - சோமசூரியாக்கினிகள், கண்மூன்றுடையான் என்றமையால் சிவபெருமான் என்றும், தொல் மாண்டுழாய் மாலை யான் என்றமையால் திருமால் என்றும், முகநான்குடையான் என் றமையால் பிரமதேவன் என்றும் பொருள் கொள்ளப்பட்டது. இங ஙனம் கூறியதனால் இது முதற்கடவுள் வணக்கமெனக் காண்க, கண்மூன்றுடைமை முதலியனவே யிவர்கட்குச சிறந்த அடையாள ஙக ளென்பதிதனாற் பெறப்பட்டது ஏகாரஙக ளிரண்டும் அசைகள்.

> பிசைபுக காயினுங் கற்றன் மிகவினிதே
> கற்றவை கைகொடுத்தல் சாலவு முன்னினிதே
> முததோ முறுவலார் சொல்லினி தாங்கினிதே
> தெற்றவு மேலாயாரச் சோவு.

ப - ரை. பிசசை புக்காயினும் - ஐயமேற் றுண்டாயினும், கற் றல்-நூல்களைக் கற்றல், மிக இனிது - மிகவு மினிதாம்; கற்றவை - (ஒருவன்) கற்ற நூல்கள், கை கொடுத்தல் - (அவனுக்குக் கற்றோர் சபையின்கண் வந்து) உதவுதல், சாலவும் - மிகவும், முன் இனிது - முற்பட இனிதாம்; முத்து - முத்தைப்போன்ற, வச் - அழகாகிய, முறுவலார் - பல்வரிசையை யுடையவராகிய மாதரது, சொல் - சொல்லானது, இனிது - இனிதாகும்; ஆங்கு - அதுபோல, தெற்ற வும - தெளியவும், மேல் ஆயார் - மேலாயினரை, சேர்வு - சேர்தல், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. பிசசைபுக்காயினுங் கற்றல்முதலியவைபோல, மேலா னாரை சேர்தல் மிகவும இனிமையைத் தருவதாகும் என்பதாம்.

வி - ரை. ஏகாரங்கள் மூன்றும் அசைகள். பிச்சைபுக்காயி னும் என்றதனால் வறுமைக் காலத்தும் என்பதும் கல்வியினருமை

யும் விளங்கின. கைகொடுத்தல் - உதவுதல். மாதர் என்றது மூத்தோர் முறுவலார் என்றமையால் அவரது உயர்வு பெறப்பட்டது; படவே, சொல் என்றது இன்சொல்லைக் குறித்தது. மேலாயார் - மேலாயினோர். (கல்வி கேள்வி யறிவொழுக்கங்களால் மேம்பட்டவர்). பிச்சை புக்காயினுங் கற்றல் முதலிய மூன்றையுங் கூறி, ஆங்கு என வுவமவுருபுகொடுத்துப் பிரித்து, மேலாயார்ச் சேர்வு இனிது என இறுதியிற் கூறினமையால், மேற்கூறிய மூன்றினிமைகளினும் மேலோரது சேர்க்கையினிமை சிறந்ததென்பது தெற்றென விளங்குகின்றது. சேர்வு - தொழிற்பெயர். (உ)

உடையான் வழக்கினி தொப்ப முடிந்தான்
மனைவாழ்க்கை முன்னினிது மாறாதா மாயி
னிலையாமை நோக்கி நெடியார் துறத்த
றலையாகத் தானினிது நன்கு.

ப - ரை. உடையான் செல்வமுடையவனது, வழக்கு - கொடை, இனிது - இனிதாகும்; ஒப்ப - (கணவன் மனைவியென்னும் இருவர் மனமும்) ஒத்திருக்க, முடிந்தால்-(அவரது) ஊழ் முற்றுப்பெற் றிருக்குமாயின், மனை வாழ்க்கை - [அவரது] இல்வாழ்க்கையானது, முன் இனிது - மிகவு மினிதாகும்; மாறாதாயின் - மாட்சிமைப் படாதாயின், நிலையாமை நோக்கி - நிலையாமையை ஆராய்ந்து, நெடியார் - பெரியார், துறத்தல் - துறத்தலானது, தலையாக - முதன்மையாக, நன்கு இனிது - மிகவு மினிதாகும், எ-று.

க - ரை. செல்வமுடையவன் வழக்கும், கணவன் மனைவியென்பவர் மனமொருமித்துச் செய்யு மில்வாழ்க்கையும், நிலையாமை நோக்கித் துறக்கும் பெரியோரது துறவும் இனிய வென்பதாம்.

வி - ரை. உடையான் என வாளாகூறினோரேனும் மேல் வழக்கு என வருதலால், "உடையார்மு னில்லார்போன்று" என்புழிப்

போல செல்வமுடையவனைக் குறித்தது. மனைவாழ்க்கை யினிது என்றதற்கேற்ப, ஒப்ப என்பதற்கு கணவன் மனைவியென்னு மிரு வர் மனமும் ஒத்திருக்க எனப் பொருளுரைக்க லாயிற்று. நிலையா மை-யாக்கை நிலையாமை முதலியன. நெடியார் - அறிவிற் சிறந்தவர். துறத்தல்-யான் எனது என்னும் அகப்பற்று புறப்பற்றுக்களை யொ ருங்கே விடுதல். தலை - தலைமையென்பத னீறுதொகுத்தல். (௩)

ஏவது மாறா இளங்கிளை முன்னினிதே
நாளுநவை போகான் கற்றன் மிகவினிதே
யேருடையான் வேளாண்மை தானினி தாங்கினிதே
தேரிற்கோ ணட்புத் திசைக்கு.

ப - ரை. ஏவது - ஏவினவேலையை, மாறா - மறக்காமற் செய் கிற, இளங்கிளை - இளங்கிளையை யுடைத்தா யிருத்தல், முன் இனிது - முற்பட இனிதாகும்; நாளும் - தினந்தோறும், நவை - கெட்டவழியில், போகான் - செல்லாதவனாய், கற்றல் - (ஒருவன்) கல்வியைக் கற்றல், மிக இனிது - மிகவும் இனிதாகும்; ஏர் உடை யான் - ஏரையுடையவனது, வேளாண்மை - வேளாண்மையானது, இனிது - இனிதாகும்; ஆங்கு - அதுபோல, தேரின் - ஆராயின், திசைக்கு - தான்போகுந் திசைக்கு, நட்புக்கோள் - (அத்திசையிலு ள்ள செல்லாரையும்) நட்புக்கொள்ளுதல், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. ஏவாமலே குறிப்பறிந்து செய்கிற வுறவினரை யுடை த்தாதல் முதலியவும் இனியவென்பதாம்.

வி - ரை. மறா என்பது மாறா என நீட்டல் பெற்றது. இளங் கிளை-அடங்கின வுறவு. கிளை - உவமையாகுபெயர். நவை - குற்றம்; அது குற்றத்தையுடைய நெறிக்காயிற்று. குற்றத்தையுடைய நெறி- தீநெறி. போகான் - முற்றெச்சம். வேளாண்மை - உபகாரம். பிற

றெல்லாஞ் செய்யும் வேளாண்மை போலாது என்றும் நிலைபெற்றிருப்பதாதலால், எருடையான் வேளாண்மை தானினிது என்றார். கோள் - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். (௪)

யானை யுடையபடை காண்டன் மிகவினிதே
யூனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

ப - ரை. யானை உடைய - யானைகளையுடைய, படை - படையை, காண்டல் - காணுதல், மிக இனிது - மிகவுமினிதாகும்; ஊனை - (பிறிதோருடம்பின்) தசையை, தின்று - உண்டு, ஊனை - தன்னுடம்பை, பெருக்காமை-வளர்க்காமையானது, முன் இனிது- முற்பட இனிதாகும்; கான்யாற்று-காட்டாற்றினது, கரை அடை- கரையையடைந்த, ஊர் - ஊரிலிருத்தல், இனிது - இனிதாகும்; அங்கு - அதுபோல, மானம் உடையார் மதிப்பு - பெருமையுடையவரால் மதிக்கப்படும் மதிப்பானது, இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. யானைப்படையைக் காணுதல் முதலியவும் இனியவென்பதாம்.

வி - ரை. நால்வகைப் படையினும் யானைப்படை சிறந்ததாதலால் யானையுடைய படைகாண்டன் மிகவினிது என்றும், புலாலுண்ணாமை தவத்திற்குச் சிறந்த அங்கமாதலால் ஊனைத்தின் றூனைப்பெருக்காமை முன்னினிது என்றும், எல்லாப் பொருள்களும் எளிதிற் கிடைக்கப் பெறுதலால், கான்யாற் றடைகரை யூரினிது என்றும், மாசஞ்சிறுகக் குவித்து நிதிக்குவை யீகையி னெக்கழுத்தமிக்குடைத்தாதலால், 'அங்கினிதே மானமுடையார் மதிப்பு' என்றும் கூறினார். படை - பகைவரைப் படுத்தற்குரியது. ஊன் இரண்

டனுள் பின்னையது சினையாகுபெயர். பெருக்கல்-வளர்த்தல். பெருக்காமை - எதிர்மறைத் தொழிற்பெயர். (ரு)

கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்னினிது செங்கோல னாகுத
லெய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு.

ப - ரை. கொல்லாமை - ஒருயிரையுங் கொல்லாதிருத்தல், முன் இனிது - முற்பட இனிதாகும்; மாராயன் - பெருமையையுடைய அரசன், கோல் கோடி - நீதி தப்பி, செய்யாமை - (அநீதி) செய்யாதிருத்தல், முன் இனிது - முற்பட இனிதாகும்; செங்கோலன் ஆகுதல் - (அவ்வரசன்) செங்கோலை யுடையவனாதல், முன் இனிது - முற்பட இனிதாகும்; யார்மாட்டும்-யாவரிடத்தும், பொல்லாங்கு உரையாமை - தீமையெடுத்துச் சொல்லாதிருத்தல், நன்கு - நன்மையாக, எய்தும் திறத்தால் - பொருந்தும் விதத்தால், இனிது என்ப - இனிதாகுமென்று சொல்லுவர் (பெரியோர்), எ - று.

க - ரை. ஒருயிரையுங் கொல்லா திருத்தலும், அரசன் அநீதி செய்யாது செங்கோலனா யிருத்தலும், ஒருவரிடத்தும் தீங்குரையாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. ராயன் - ராஜன் என்னும் வடமொழித் திரிபு. கோல்கோடி என்றதனால் செய்யாமை யென்பதற்கு அநீதி செய்யாமை யெனப் பொருள் கூறலாயிற்று. கோல்கோடலாவது - கொடுங்கோலனாதல். கோடுங்கோல் கொடுங்கோல் எனக் குறுக்கல் பெற்று வழங்குகின்றது. (சு)

ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக
காப்படையக் கோட லனது.

ப - ரை. ஆற்றும் துணையால் - தமக்கியலு மளவினால், அறம் செய்கை - தருமத்தைச் செய்தல், முன் இனிது - முற்பட இனிதாகும்; பால்பட்டார் - நன்னெறிப்பகுதியிற்பட்டவர், கூறும்-சொல்லுகிற, பயம் மொழி - பயனுடைய சொல்லின், மாண்பு - மாட்சிமையானது, இனிது - இனிதாகும்; வாய்ப்பு உடையர் ஆகி - குற்றமற்றவராகி, வலவைகள் அல்லாரை - (நாணத்தக்க) அலிகளல்லாதவரை, காப்பு அடைய - காவலாகப்பொருந்த, கோடல் - கொள்ளுதல், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. தமக்கியன்றவளவால் தருமஞ் செய்தலும், பெரியோரது சொல்லும், வீரரைக் காவலாகவுடைத்தாதலும் இனியவென்பதாம்.

வி - ரை. ஆற்றுந்துணை - ஒல்லுந்துணை; அதாவது இல்லறம் பொருளளவுக் கேற்பவும், துறவறம் யாக்கைநிலைக் கேற்பவுஞ்செய்தல். செய்கை - தொழிற்பெயர். கூறும் பயமொழி மாண்பினிதேயென மேல்வருதலால் பாற்பட்டார் என்பதற்கு நன்னெறிப் பகுதியிற் பட்டவர் எனப்பொருள் கூறலாயிற்று. பயம் - பயன். கோடல்-கொள்ளுதல்; கொள்தல் எனப் பிரியும். (எ)

அந்தண ரோத்துடைமை யாற்ற மிகவினிதே
பந்த முடையான் படையாண்மை முன்னினிதே
தந்தையே யாயினுந் தானடங்கா னாகுமேற்
கொண்டடையா னாத லினிது.

ப - ரை. அந்தணர் - பிராமணர், ஒத்து உடைமை - வேதத்தையுடையாராயிருத்தல், ஆற்ற மிக இனிது - மிகவு மினிதாகும்; பந்தம் உடையான் - சுற்றத்தை யுடையவன், படை ஆண்மை - படை யெடுத்தாளுந்தன்மை, முன் இனிது - முற்பட இனிதாகும்;

தந்தையே ஆயினும் - தந்தையேயானாலும், தான் அடங்கான் ஆகு மேல் - அவன் அடங்காதவனானால், கொண்டு அடையானாதல் - (மகன்) அவனைச் சேராதவனாயிருத்தல், இனிது-இனிதாகும், எ-று.

க - ரை. அந்தணர் வேதாத்தியயந முடைத்தாதலும், சுற்ற முடையவன் ஆயுதமாளுந் தன்மையும், தந்தையாயினும் கொடிய னானால் அவனைச் சேராதிருத்தலும் இனியவென்பதாம்.

வி - ரை. அந்தணர் - அழகிய தட்பத்தினை யுடையார் என எதுப்பெயராதலால், அருளுடையார் எனவும் பொருள்படும்;படவே ஒத்துடைமை அருளுடைமை முதலிய வேதமார்க்க முடைமை யென்க. தந்தை-தன்றந்தையென்பதன் மரூஉ. அடைதல்-சேர்தல்.

[பஃறொடைவெண்பா.]

ஊரும் கலிமா வுரனுடைமை முன்னினிதே
தாரணி மன்னர் தமக்குற்ற போர்க்களத்துக்
கார்வரைபோல் யானைக் கதங்காண்டன் முன்னினிதே
யார்வ முடையவ ராற்றவு நல்லவை
பேதுறார் கேட்ட லினிது.

ப - ரை. ஊரும் - தாம் நடத்துகிற, கலிமா - மிக்க குதிரை, உரன் உடைமை-வலியுடைமை, முன் இனிது-முற்பட இனிதாகும்; தார் அணி - மாலையை யணிந்த, மன்னர் - அரசர், தமக்கு - தங்களுக்கு, உற்ற - நேரிட்ட, போர்க்களத்து - யுத்தபூமியில், கார் வரைபோல் - கரியமலைபோலத் தோன்றுகிற, யானை - யானையின், கதம் - கோபத்தை, காண்டல் - காணுதல், முன் இனிது - மிகவு மினிதாகும்; ஆர்வம் உடையவர் - (எல்லா வுயிர்களின்மீதும்) அன்புடையவர், ஆற்றவும் நல்லவை - மிகவும் நல்ல கேள்விகளை, பேதுறார் - மயங்காமல், கேட்டல் - சிரவணஞ் செய்தல், இனிது - இனிதாகும், எ-று.

க-ரை. குதிரைவலி யுடைத்தாதலும், அரசர் தமது யுத்த பூமியில் யானையின் கோவத்தைக் காண்டலும், எல்லாவுயிர்களின் மேலும் அன்புடையவர் நல்ல கேள்விகளைக் கேட்டலும் இனிய வென்பதாம்.

வி-ரை. ஊர்தல் - நடத்துதல். உரம் - உரன் எனப் போலி யாயிற்று. தாரணி மன்னர் என்பதற்கு உலகத்தை யாளுகின்ற அர சர் என்றுரைப்பினுமாம். ஆர்வம் - அன்பு. பேதுறார் முற்றெச்சம். பேதுறு - பகுதி; பேதுறல் - மயங்கல். (௯)

தங்க ணமர்வுடையார் தாம்வாழ்தன் முன்னினிதே
யங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது.

ப-உரை. தம் கண் - தம்மிடத்து, அமர்வு உடையார் - சேர்த லுடையார், தாம் வாழ்தல் - தாம் வாழ்ந்திருத்தல், முன் இனிது - மிகவுமினிதாம்; அம் கண் - அழகிய இடத்தையுடைய, விசும்பில் - ஆகாயத்திலுள்ள, அகல் - அகன்ற, நிலா - சந்திரனை, காண்பு - காண்டல், இனிது - இனிதாகும்; பங்கம் இல் - பழுதில்லாத, செய் கையர் ஆகி - செய்கையுடையவராகி, பரிந்து - இரங்கி, யார்க்கும் - எல்லாரிடத்தும், அன்பு உடையர் ஆதல் - அன்புடையராயிருத்தல், இனிது - இனிதாகும், எ-று.

க-ரை. தம்மைச் சேர்ந்தவர் செல்வராயிருத்தலும், ஆகாயத்தி லுள்ள சந்திரனைத் தரிசித்தலும், எல்லாரிடத்தும் அன்புடையராத லும் இனியவென்பதாம்.

வி-ரை. அமர்வு - விருப்பம் எனினுமாம். பங்கமில் செய்கை- நற்செய்கை. பரிதல் - இரங்கல். யார்க்கும்-உருபுமயக்கம். காண்பு - தொழிற்பெயர். தம்கண் என்பதில் கண்-ஏழனுருபு. (௧௦)

கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்கலினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகற
லெனைமாண்பு தானினிது நன்கு.

ப - ரை. கடம் உண்டு வாழாமை - கடன்பட் டுண்டுவாழாமை யை, காண்டல் - காணுதல், இனிது - இனிதாகும்; நிறை - நிறை ந்த, மாண்பு இல் - மாட்சிமைக்குணங்க ளில்லாத, பெண்டிரை - மனைவியரை, நீக்கல் - நீக்கிவிடுதல், இனிது - இனிதாகும்; மனம் - மனத்தின்கண், மாண்பு - மாட்சிமைக்குணங்கள், இலாதாரை - இல்லாதவரை, அஞ்சி அகறல் - பயந்து விலகிவிடுதல், எனை மா ண்பு - எவ்வகையாகிய மாட்சியிலும், இனிது நன்கு - மிகவும் இனி தாகும், எ-று.

க - ரை. கடன்பட்டு உயிர் வாழாமையும், மனைமாட்சியில்லாத மனைவியை நீக்கிவிடுதலும், வஞ்சகரைவிட்டு நீங்குதலும் இனிய வென்பதாம்.

வி - ரை. கடம் - கடன் என்பதன் போலி. வாழாமை - எதிர் மறைத் தொழிற்பெயர். நிறைமாண்பு - நிறைந்த மாட்சிமைக் குண ங்கள்; அவை துறந்தார்ப்பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட் டருளுடைமையும் முதலிய நற்குணங்களும், வாழ்க்கைக்கு வேண் டும் பொருள்க ளறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில் வன் மையும், ஒப்புரவு செய்தலும் முதலிய நற்செய்கைகளுமாம். மன மாண்பு - அருள் அன்பு முதலாயின. மனமாண்பிலாதார் என்றத னால் வஞ்சகர் என்றுரைத்துக்கொள்க. அகறல் - அகல்தல். இலா தாரை அகறல் என வியையும். (௧௧)

அதர்சென்று வாழாமை யாற்ற வினிதே
குதர்சென்று கொள்ளாத கூர்மை யினிதே

வுயிர்சென்று தான்படினு முண்ணார்கைத் துண்ணாப்
பெருமைபோற் பீடுடைய தில்.

ப - ரை. அதர் சென்று - வழிகட்டிப்பறித்து, வாழாமை-(அத னால்) உயிர் வாழாதிருத்தல், ஆற்ற இனிது - மிகவு மினிதாகும்; குதர் சென்று - நெறிதப்பி, கொள்ளாத யாதானு மோர்நூற்குப் பொருள் கொள்ளாத, கூர்மை - அறிவுநுட்பம், இனிது - இனிமை யாகும்; உயிர்சென்று படினும்-உயிர் (பசியால்) நீங்கிவிடுவதா யிருப் பினும், உண்ணார் கைத்து - உண்ணத்தகாதவருடைய கைப்பொ ருளை, உண்ணா - உண்ணாத, பெருமைபோல் - மாட்சிமைபோல், பீடு உடையது இல் - பெருமையுடையது வேறொன்று மில்லை, எ-று.

க - ரை. வழிபறித்து வாழாமையும், நூற்பொருளை யுள்ளபடி யறியும் அறிவு நுட்பமும், உயிர் நீங்கநேரினும் உண்ணத்தகாதவ ருடைய கைப்பொருளை யுண்ணாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. அதர் செல்லுதல் பறித்தற்காதலால், அதர்சென்று என்பதற்கு வழிகட்டிப் பறித்து என்று பொருள் கூறலாயிற்று. குதர் - தப்புவழி. உண்ணார்கைத் துண்ணாப்பெருமை யெனமேல் வருதலால், உயிர் சென்று தான்படினும் என்புழி பசியாலென ஒரு சொல் வருவித்துரைக்கப்பட்டது. (கஉ)

குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயலிக ளல்லராய் மாண்புடையார்ச் சேருந்
திருவுந் தீர்வின்றே லினிது.

ப - ரை. குழவி - மக்கள், பிணி இன்றி - நோயில்லாமல், வாழ் தல் - வாழ்ந்திருத்தல், இனிது - இனிதாகும்; கழறும் - உரைத்துப்

பேசுகிற, அவை - சபையார்க்கு, அஞ்சான் - பயப்படாதவனது, கல்வி - கல்வியானது, இனிது - இனிதாகும்; மயலிகள் அல்லர் ஆய் - மயக்கமுடையவ ரல்லாதவராகி, மாண்பு - மாட்சிமைக் குணங்களை, உடையார் - உடையவராகிய பெரியோரை, சேரும் - அடைகிற, திருவும் - பாக்கியமும், தீர்வு இன்றேல் - நீங்குத லில்லையாயின், இனிது - இனிதாகும், எ-று.

க-ரை. குழந்தைகள் நோயின்றி வாழ்தலும், சபைக்கஞ்சாதவனது கல்வியும், பெரியாரைச் சேர்தலும் இனிய வென்பதாம்.

வி - ரை. குழவி - ஈன்றணிமையுடைய ஆண்பெண் மக்களுக்குப் பொதுப்பெயர். கழறுதல் - பேசுதல். மயலிகள் - மயக்கமுடையவர்கள். திரு - செல்வம். தீர்வு - தொழிற்பெயர். இன்றேல் என்பதில் எல் எனின் என்பதன் மரூஉ. (கடு)

மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமை தானடங்கி வாழ்வினிதே
யூன மொன்றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது.

ப - ரை. மானம் அழிந்தபின் - மானங்கெட்ட பின்பு, வாழாமை - உயிர்வாழாமை, முன் இனிது - மிகவு மினிதாகும்; தானம் - (தான்வாழும்) இடம், அழியாமை - கெடாதவகை, தான் அடங்கி வாழ்வு-தான் அடக்கமுடையனாய் வாழ்தல், இனிது - இனிதாகும்; ஊனம் ஒன்று இன்றி - குற்றம் சிறிது மில்லாமல், உயர்ந்த பொருள் உடைமை - சிறந்த திரவியமுடைத்தாதல், மானிடவர்க்கு எல்லாம் - மனிதருக்கெல்லாம், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. மானங்கெட்டு வாழாமையும், தான் வாழுமிடங் கெடாதவகையாய் வாழ்தலும், நல் வழியில் வந்த பொருளுடைமையும் இனியவென்பதாம்.

வி - ரை. மானமழிந்த பின் வாழாமை-உயிர்விடுதல். தானம்-இடம். மாணிடவர் - மறுவழியில் வந்தவர். (கச)

குழவி தளர்நடைபைக் காண்ட லினிதே
யவர்மழலை கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும்போழ்து
மனனஞ்சா னாக லினிது.

ப - ரை. குழவி - மக்களுடைய, தளர் நடையை - தளர்ந்த நடையை, காண்டல் - காணுதல், இனிது - இனிதாகும்; அவர் - அந்த மக்களுடைய, மழலை - மழலைச் சொற்களை, கேட்டல் - காதாரக் கேட்டலானது, அமிழ்தின் - அமுதம்போல, இனிது - இனிதாகும்; வினையுடையான் - வினைக்குரியவன், வந்து அடைந்து - வந்து சேர்ந்து, வெய்துறும் போழ்து - தான் வெப்பமடையும் போதில், மனம் அஞ்சான் ஆகல் - மனமஞ்சாதவனா யிருத்தல், இனிது-இனிதாகும், எ-று.

க - ரை. மக்களுடைய தளர் நடையைக் காண்டலும், அவரது மழலைச் சொல்லைக் கேட்டலும், பகைவன் வந்தபோது மனமஞ்சாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. தளர்நடை - துவணடை. மழலை - திரம்பா மென் சொல். அமிழ்தின் என்பதில் இன் ஐந்தாவத னுறழ்ம்பொருளில் வந்ததெனக்கொண்டு அமிர்தத்திலும் எனப் பொருள் கூறினுமாம். மனன்-மனம் என்பதன் போலி. மனனஞ்சானுதலாவது மனவுறுதி கெடாதிருத்தல் (தைரியமாயிருத்தல்). (கரு)

பிறன்மனை பின்னோக்காப் பீடினி தாற்ற
வறலுழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர் வினிதே
மறமன்னர் தங்கடையின் மாமலைபோல் யானை
மதமுழக்கங் கேட்ட லினிது.

ப - ரை. பிறன் - பிறனது, மனை-மனையாளை, பின் நோக்கா - பின்பாராத, பீடு - பெருமை, ஆற்ற இனிது - மிகவுமினிதாம், அறம் உழக்கும் - நீரின்பொருட்டு வருந்துகிற, பைங் கூழ்க்கு - பயிர்களுக்கு, வான் சோர்வு - மழைபெய்தல். இனிது - இனிதாகும்; மறம் - வீரத்தையுடைய, மன்னர் - அரசருடைய, கடையில் - கடைவாயில், மா - பெரிய, மலைபோல் - மலையை நிகர்த்த, யானை - யானைகளுடைய, மத முழக்கம்-மதச்செருக்கா லுண்டாகிற முழக்கமானது, கேட்டல் - கேட்கப்படுதல், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. ஒருவன் பிறன் மனைவியை விரும்பாத பெருமையும், பயிருக்கு மழைபெய்தலும், அரசர் முற்றத்தில் மதயானை முழக்கமும் இனியவென்பதாம்.

வி - ரை. மனை - இடவாகுபெயர். அறல் - நீர். வான் - இடவாகுபெயர். சோர்வு - தொழிற்பெயர்; பெய்தல் என்பது பொருள். மதமுழக்கம் - மதக்களிப்பான் முழங்கு முழக்கம். (கசு)

கற்றார்முற் கல்வி யுரைத்தன் மிகவினிதே
மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே
யெட்டுணை யானு மிரவாது தானீத
லெத்துணையு மாற்ற வினிது.

ப - ரை. கற்றார் முன் - கற்றவர்க்குமுன்பு, கல்வி - தாம் கற்ற கல்வியை, உரைத்தல் - சொல்லி யேற்கச்செய்தல், மிக இனிது - மிகவுமினிதாகும்; மிக்காரை - மேலானவரை, சேர்தல் - அடைதல், மிக மாண - மிக மாட்சிமைப்பட, முன் இனிது - மிகவுமினிதாம்; எள் துணை ஆனும் - எள்ளளவாயினும், இரவாது - இரவாமல், தான் - ஒருவன், ஈதல் - பிறர்க்குக் கொடுத்தல், எத்துணையும் - எல்லா வகையாலும், ஆற்ற இனிது - மிகவு மினிதாகும், எ-று.

க - ரை. ஒருவர் தாம் கற்ற கல்வியைத் தம்மினுங் கற்றார் முன் சொல்லுதலும், பெரியோரைச் சேர்ந்திருத்தலும், இரவாது உயிர் வாழ்தலும், தன்னிடத் திரந்தவர்க்கு இல்லையென்னாது கொடுத்தலும் இனிய வென்பதாம்.

வி - ரை. கற்றார் என்றது தம்மினுங்கற்றாரை. மிக்கார் - கல்வியறிவொழுக்கங்களால் மேம்பட்டவர். துணை - அளவு. இரவாது தானீதலாவது உயிர் நீங்க நேரினும் தான் ஒருவரிடத்துச் சென்றிரவாது தன்னிடத்து வந்திரப்பவர்க்குத் தானில்லையென்னாது இயன்றவளவாகக் கொடுத்தல். (கஎ)

மன்றின் முதுமக்கள் வாழும் பதியினிதே
தந்திரத்தின் வாழும் தவசிகள் மாண்பினிதே
யெஞ்சா விழுச்சீ ரிருமுது மக்களைக்
கண்டொழுதல் காலை யினிது.

ப - ரை. மன்றில் - சபையில், முதுமக்கள் - பெரியோர்கூடி, வாழும் - வாழ்கின்ற, பதி - ஊரானது, இனிது - இனிதாகும்; தந்திரத்தின் - நூல்வழியாலே, வாழும் - வாழ்கின்ற, தவசிகள் - தவசிகளுடைய, மாண்பு - பெருமை, இனிது - இனிதாகும்; எஞ்சா - குறையாத, விழு சீர் - பெருஞ்சிறப்பினையுடைய, இருமுது மக்களை - தாய்தந்தையரை, காலை கண் - காலைப்பொழுதில், தொழுதல் - வணங்குதல், இனிது - இனிதாகும், எ-று,

க - ரை. பெரியோர்கள் வாழுஞ்சபையுள்ளவூரில் இருத்தலும், வேதநூனெறியி லொழுகும் தவசிகளுடைய பெருமையும், காலைப் பொழுதில் தாய்தந்தையரை வணங்கலும் இனிய வென்பதாம்.

வி - ரை. மன்று - சபை. முதுமக்கள் - வயதினாலும் அறிவினாலும் முதிர்ந்த மக்கள். தந்திரம் - நூல் (வேத நூல்). தவசி - தவஞ்

செய்வோன். கண்தொழுதல் என்பதற்கு, கண்ணினால் தரிசித்தல் எனினு மமையும். (கஅ)

நட்டார்ப் புறங்கூறான் வாழ்த னனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகன் முன்னினிதே
முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கால் மற்றது
தக்குழி யீதலே நன்று.

ப - ரை. நட்டார் - நட்டவரை, புறங்கூறான் - பழிகூறாதவனாய், வாழ்தல் - வாழ்வது, நனி இனிது - மிகவும் இனிதாகும்; பட்டாங்கு - உண்மைநூற்பொருளை, பேணி - விரும்பி, பணிந்து-யாவரையும் வணங்கி, ஒழுகல் - ஒழுகுதல், முன் இனிது - மிகவும் இனிதாகும், முட்டு இல் - குறைவில்லாத, பெரும் பொருள் - மிக்கபொருளை, ஆக்கியக்கால் - தேடினகாலத்தில், அது-அப்பொருளை, தக்குழி - தகுந்தவிடத்தில், ஈதல் - கொடுத்தல், இனிது-இனிதாகும், எ - று.

க - ரை. நட்டாரைப் புறங்கூறாமையும், உண்மை நூற்பொருளை விரும்பி எல்லார்க்கும் பணிவா யொழுகலும், பொருளுண்டாயின் தகுதியுடையார்க் கீதலும் இனியவென்பதாம்.

வி - ரை. நட்டார்-உறவினர்; அன்றிச் சிநேகிதர். பட்டாங்கு-உண்மை; அது இங்கு உண்மையைக்கூறும் நூல்களைக் குறித்தது. முட்டு - தடையெனினுமாம். ஆக்குதல் - தேடுதல். தக்க உழி-தகுதியான இடம்; அது தக்குழியென நிலைமொழியீறு தொகுத்தலாயிற்று. சற்பாத்திரம் என்பது பொருள். (கக)

சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலைதலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாந்
தகுதியால் வாழ்த லினிது.

ப - ரை. சலவரை - வஞ்சகரை, சாரா விடுதல் - சேராது ஒழிதல், இனிது-இனிதாகும்; புலவர் - அறிவுடையாரது, வாய்மொழி, வாய்ச்சொல்லை, போற்றல் - போற்றி யொழுகுதல், இனிது - இனிதாகும்; மலர் - பரந்த, தலை - இடத்தையுடைய, ஞாலத்து-உலகத்தில், மன் - பொருந்திய, உயிர்க்கு எல்லாம் - உயிர்களுக்கெல்லாம், தகுதியான் - தத்தம் தகுதியோடு, வாழ்தல் - ஒழுகுதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. வஞ்சகரைச் சேராமையும், புலவர் வாய்மொழி போற்றலும், தகுதியால் வாழ்தலும் இனியவென்பதாம்.

வி - ரை. சலம் - தீராக்கோவமாதலால் சலவரை யென்பதற்குத் தீராக்கோவமுடையவரை யென்றுரைப்பினுமாம். சாராது என்னும் வினையெச்சத்தீறு தொகுத்தலாய் சாரா என நின்றது. புலம் - அறிவு ; அதனை யுடையவராதலால் அறிவுடையாரைப் புலவர் என்றூர். அவரது மொழிப்பெருமை தோன்ற, 'வாய்மொழி' என்றூர். தலை - இடம். தகுதி - முறைமை. (உ0)

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்தலினிதே
யறம்புரிந் தல்லவை நீக்க லினிதே
மறந்தேயு மாணு மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்த லினிது.

ப - ரை. பிறன் - பிறனது, கை - கையிலுள்ள, பொருள் - பொருளை, வெளவான் - கவர்ந்து கொள்ளாதவனாய், வாழ்தல் - ஒருவன் வாழ்ந்திருத்தல், இனிது - இனிதாகும்; அறம் - தருமத்தை, புரிந்து-செய்து, அல்லவை-பாவங்களை, நீக்கல்-நீக்குதல், இனிது - இனிதாகும்; மறந்தேயும் - மறந்தாயினும், மாணு - மாட்சிமைப்படாத, மயரிகள் - அறிவிலிகளை, சேரா - அடையாத, திறம் - உபாயத்தை, தெரிந்து - தெரிந்துகொண்டு, வாழ்தல் - வாழ்வது, இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. பிறன்பொருளை விரும்பாது வாழ்தலும், தருமஞ்செய்து பாவத்தை யொழித்தலும், மறந்தாயினும் அறிவிலிகளைச் சேராதிருத்தலும் இனிய வென்பதாம்.

வி - ரை. வெளவான் - முற்றெச்சம்; வெளவல் - கவர்தல். அறம் புரிந்து என்றதையடுத்து அல்லவை யென்றதனால் பாவங்கள் எனப் பொருளுரைக்க லாயிற்று, மயரி-அறிவிலான். சேராத்திறம் - சேராதவுபாயம்.

(உக)

வருவா யறிந்து வழங்க லினிதே
யொருவர் பங்காகாத வூக்க மினிதே
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்த லினிது.

ப - ரை. வருவாய் - தன்பொருள் வருவாயை, அறிந்து - தெரிந்துகொண்டு, வழங்கல் - அதற்கேற்ப வழங்குதல், இனிது - இனிதாகும்; ஒருவர் பங்கு ஆகாத - ஒருவருடைய சார்பு ஆகாத, ஊக்கம்-மனவெழுச்சி, இனிது - இனிதாகும்; பெருவகைத்து ஆயினும் - பெரும்பயனுடைய தாயினும், பெட்டது - தாம் நினைத்த காரியத்தை, செய்யார் - ஆராயாது செய்யாதவராய், திரிபு இன்றி - வேறுபாடில்லாமல், வாழ்தல் - வாழ்ந்திருத்தல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. வருவாயறிந்து வழங்கலும், நடுவுநிலையா யிருத்தலும், பெரும்பயனுடைய காரியங்களையும் ஆராயாது செய்யாத இயற்கையாய் வாழ்தலும் இனிய வென்பதாம்.

வி - ரை. வருவாய் - வருவழி (வருமானம்). வருவாயறிந்து வழங்கல் - இல்லறத்திருப்பான் பொருளளவுக் கேற்ப வழங்கல் ; வழங்கல் - கொடுத்தல், ஒருவர் பங்காகாமை - நடுவுநிலைமை, பெட்

டவை - விரும்பினவை, செய்யார் - முற்றெச்சம். திரிபின்மை - மாறுபடாமை (இயற்கை). (உஉ)

காவோ டறக்குளந் தொட்டன் மிகவினிதே
யாவோடு பொன்னீத லந்தணர்க்கு முன்னினிதே
பாவமு மஞ்சாராய்ப் பற்றுந் தொழின்மொழி
சூதரைச் சோர்த லினிது.

ப - ரை. காவோடு - சோலையோடு, அறக்குளம் - தருமத்திற்குக் குளத்தையும், தொட்டல் - வெட்டுதல், மிக இனிது - மிக இனிதாகும்; அந்தணர்க்கு - பிராமணர்க்கு, ஆவோடு - பசுவோடு, பொன்-பொன்னையும், ஈதல்-தானமாகக்கொடுத்தல், முன் இனிது - மிகவும் இனிதாகும்; பாவமும் - பாவஞ்செய்தற்கும், அஞ்சாராய் - பயப்படாதவராகி, பற்றும் - தொடர்கின்ற, தொழில் - தொழிலையும், மொழி - சொல்லையுமுடைய, சூதரை - வஞ்சகரை, சோர்தல் - கைவிடுதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. சோலைவைத்தலும், தருமத்துக்குக் குளமெடுத்தலும், அந்தணர்க்குக்கோதாந ஹிரண்யதாநங்களைச் செய்தலும், பாவத்துக்கஞ்சாத வஞ்சகரைக் கைவிடுதலும் இனியவென்பதாம்.

வி - ரை. கா - தோப்பு எனினுமாம். அறக்குளம் - பலருக்கும் உதவும்படி தருமங்கருதி யெடுத்தகுளம். தொடுதல்-தோண்டுதல். சூது - வஞ்சனை; அதனையுடையவர் சூதர். சோர்தல் - கைவிடுதல்.()

வெல்வது வேண்டி வெகுளாதா னோன்பினிதே [தே
யொல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினி
யில்லது காமுற் றிரங்கி யிடர்ப்படார்
செய்வது செய்த லினிது.

ப - ரை. வெல்வது - தான்வெல்வதையே, வேண்டி - விரும்பி வெகுளாதான் - கோபியாதவனது, நோன்பு - தவம், இனிது - இனிதாகும்; ஒல்லும் துணையும் - தனக்கியன்றவளவும், ஒன்று - தானெடுத்துக்கொண்ட ஏதேனும் ஒரு கருமத்தை, உய்ப்பான் - நடத்துவானது, பொறை இனிது - பொறுமையினிதாகும்; இல்லது - தனக்கில்லாத பொருளை, காமுற்று - விரும்பி, இரங்கி - அது கிடையாமையால் இரங்கி, இடர்ப்படார் - துன்பப்படாதவராகி, செய்வது - செய்யத்தகுந்த காரியத்தை, செய்தல் - செய்துமுடித்தல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. தான் வெல்வதையே விரும்பிக் கோவியாதவனது நோன்பும், இயலுமளவும் எடுத்த காரியத்தை நடத்துவோனது பொறுமையும், தமக்கில்லாத தொருபொருளை விரும்பி அது கிடையாமையால் துக்கியாதவராய்த் தாம் செய்யவேண்டியவற்றைச் செய்யுந்திறமையும் இனியவென்பதாம்.

வி - ரை. வெல்வது - வெற்றி. வெகுளல் - கோவித்தல். நோன்பு - பொறுமையுமாம். ஒல்லுதல் - இயலுதல். உய்த்தல் - நடத்தல். காமுறல் - ஒருசொல்; விரும்பல் என்னும் பொருளது; பகுதி-காமுறு. இடர்ப்படார் - முற்றெச்சம். செய்வது செய்தல் - செய்யத்தகுவனவாகிய நன்மைகளையே செய்தல். (௨௪)

ஐவாய வேட்கை யவாவடக்கன் முன்னினிதே
கைவாய்ப் பொருள்பெறினுங் கல்லார்கட் டீர்வினிதே
நில்லாத காட்சி நிறையின் மனிதரைப்
புல்லா விடுத லினிது.

ப - ரை. ஐவாய - ஐந்து வாயில்களையுடைய, வேட்கை அவா - சப்தாதி விஷயங்களாகிய ஆசைகளை, அடக்கல் - அடக்குதல், முன் இனிது - முற்பட இனிதாகும்; கைவாய் - கையினிடத்து, பொருள்

பெறினும் - பொருளைப் பெற்றாலும், கல்லார்கள் - கல்லாதவரிடத்தையும், தீர்வு - விட்டொழிதல், இனிது - இனிதாகும்; நில்லாத காட்சி நிறை இல் - நிலைபெறாத அறிவு நிறைவில்லாத, மனிதரை - மக்களை, புல்லா - சேராமல், விடுதல் - விட்டொழிதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. ஐம்பொறிகளை வாயில்களாகவுடைய ஐம்புலன்களையடக்குதலும், பொருள் பெறுவதாயிருப்பினும் கல்லாதவர்களைச் சேராது கைவிடுதலும், நிலைபெறாத அறிவினையுடைய கீழ்மக்களைக் கூடாது ஒழிதலும் இனியவென்பதாம்.

வி - ரை. வாய் - வாயில். ஐவாய - ஐம்பொறிகளை வாயில்களாகவுடைய. ஐம்பொறிகளாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. சப்தாதி விஷயங்களாவன : சப்த, ஸ்பர்ஶ, ரூப, ரஸ, கந்தங்கள். அவா - விஷயங்களின் மேற்செல்லு மாசை. பெறினும் என்னும் உம்மை உயர்வு சிறப்பு. கல்லார்கண் தீர்வு என்றமையால் அவரைத் தீர்வு என்பது சொல்லாதே யமையும். தீர்வு-தொழிற் பெயர். காட்சி - அறிவு. புல்லாது என்பது புல்லா என ஈறுதொகுத்தலாயிற்று. (உரு)

நச்சித் தமர்சென்றா ரசைகொல்லா மாண்பினிதே
யுட்கில் வழிவாழா வூக்க மிகவினிதே
யெத்திறத் தானு மியையவ கரவாத
பற்றினிற் பாங்கினிய தில்.

ப - ரை. நச்சி - விரும்பி, தன் சென்றார் - தன்னை யடைந்தவரது, நசை கொல்லா - ஆசையைக் கெடுக்காத, மாண்பு - மாட்சிமையானது, இனிது - இனிதாகும்; உள்கு இல்வழி - மதிப்பில்லாத விடத்தில், வாழா - வாழாத, ஊக்கம் - மனவெழுச்சியானது, மிக இனிது - மிகவுமினிதாகும்; எத்திறத்தானும் - எவ்வகையாலும்,

இயைவ - கொடுக்கக்கூடுவனவற்றை, காவாத - ஒளிக்காத, பற்றினில் - இல்வாழ்வுபோல, பாங்கு இனியது - மிக இனியது, இல் - வேறொன்றுமில்லை, எ - று.

க - ரை. தன்னை விரும்பி வந்தவரது விருப்பத்தை நிறைவேற்றுதலும், மதிப்பில்லாதவிடத்தில் வாழாமையும், கொடுக்க இயல்வதை இரப்பவர்க் கொளியாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. நச்சல் - விரும்பல். நசை - விருப்பம். கொல்லல் - அழித்தல். உட்கு - நினைத்தல் (மதித்தல்). காத்தல் - ஒளித்தல். தன்சென்றார் - இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். இயைதல் - இசைதல். இல்வழி - பெயரெச்சத்தொடர். (உசு)

தானங் கொடுப்பான் றகையாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே
யூனங்கொண் டாடா ருறுதி யுடையவை
கோண்முறையாற் கோட லினிது.

ப - ரை. தானம் கொடுப்பான் - தானஞ் செய்வோனது, தகை ஆண்மை-பேராண்மையானது, முன் இனிது-முற்பட இனிதாகும்; மானம் படவரின் - மானங் கெடவருமாயின், வாழாமை-உயிர் வாழ்ந்திராமை, முன் இனிது - மிகவு மினிதாகும்; ஊனம் கொண்டாடார் - குற்றத்தைக் கொண்டாடாமல், உறுதி உடையவை - உறுதியுடையவாகிய பொருள்களை, கோள்முறையால் - மனத்திற்கொள்ள வேண்டிய முறையினால், கோடல் - கொள்ளுதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. தானங்கொடுப்பவனது பெருமையும், மானமழிந்து உயிர்வாழாமையும், குற்றங் கொள்ளாமல் குணத்தைக் கொள்ளுதலும் இனியவென்பதாம்.

வி - ரை. தானம்-கோதாந பூதாந ஹிரண்யதாநாதிகள். தகை-பெருமை. மானம் படவரின் என்புழி படுதல் கெடுதல் என்னும் பொருளது. கொண்டாடார் - முற்றெச்சம். கோள் - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். (உஎ)

ஆற்றுனை யாற்றென் றலையாமை முன்னினிதே
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே
யாக்க மழியினு மல்லவை கூறுத
தேர்ச்சியிற் றேர்வினிய தில்.

ப - ரை. ஆற்றுனை - ஒன்றுஞ் செய்யமாட்டாதவனை, ஆற்று என்று - செய்யென்று, அலையாமை - அவனை வருத்தாமை, முன் இனிது - மிகவு மினிதாகும்; கூற்றம் - யமனானவன், வரவு - வருதலின், உண்மை - உண்மையை, சிந்தித்து - ஆலோசித்து, வாழ்வு - வாழ்தல், இனிது - இனிதாகும்; ஆக்கம் அழியினும்-செல்வம் அழியுமாயினும், அல்லவை கூறுத - பாவம் பயக்குஞ் சொற்களைச் சொல்லாத, தேர்ச்சியின் - தெளிவைப் பார்க்கினும், தேர்வு-தெளித்தறிதற்குரிய, இனியது இல்-இனியதாவது வேறொன்றுமில்லை, எ-று.

க - ரை. செய்யமாட்டாதவனைச் செய்யென்று வருத்தாதிருத்தலும், யமன் வருவானென்கிற வுண்மையை நினைத்து வாழ்தலும், செல்வமழிந்தாலும் பாவம் பயக்குஞ் சொற்களைச் சொல்லாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. ஆற்றுன் - செய்யும் வலியில்லான். அலைத்தல் - வருத்தல். வரவு - தொழிற்பெயர். உண்மை - உளதாந்தன்மை. அல்லவை - பாவங்கள். இது திருக்குறள் - இனியவை கூறல் ருக-ஆம் பாட்டு, "அல்லவை தேய வறம்பெருகு நல்லவை, நாடி யினிய சொலின்" என்பதனால் இனிது விளங்கும். (உஅ

கயவரைக் கையிகந்து வாழ்த லினிதே
யுயர்வுள்ளி யூக்கம் பிறத்த லினிதே
யெளிய ரிவரென் றிகழ்ந்துரையா ராகி
யொளிபட வாழ்த லினிது.

(ப-ரை.) கயவரை - கீழ்மக்களை, கையிகந்து - நீங்கி, வாழ்தல்- வாழ்ந்திருத்தல், இனிது - இனிதாகும்; உயர்வு - உயர்தற்குக் காரணமாகிய நற்செயல்களை, உள்ளி - ஆலோசித்து, ஊக்கம் பிறத்தல்- (அவற்றின்கண்) மனவெழுச்சி யுண்டாதல், இனிது - இனிதாகும்; இவர் எளியர் என்று-இவர் எளியாரென்று, இகழ்ந்து உரையாராகி - (அவரை) அவமதித்துப் பேசாதவராகி, ஒளிபட - புகழுண்டாம்படி, வாழ்தல் - வாழ்ந்திருத்தல், இனிது - இனிதாகும், எ - று.

க-ரை. கீழ்மக்களை நீங்கி வாழ்ந்திருத்தலும், உயர்வான காரியங்களை யாலோசித்து அவற்றில் ஊக்கத்தோ டிருத்தலும், எளியவரை அவமதித்துப் பேசாதவராய்ப் புகழ்பட வாழ்தலும் இனியவென்பதாம்.

வி-ரை. கயவர்-கயமையென்னும் பண்படியாகப் பிறந்த பெயர்; கயமை - கீழ்மை. கையிகத்தல் - ஒருசொல்; நீங்குதல் என்பதுபொருள். உள்ளல் - ஆலோசித்தல். ஒளியென்பது இங்குப் புகழ் என்னும் பொருள்பட்டது. (உக)

நன்றிப் பயன்றூக்கி வாழ்த னனியினிதே
யன்றங் கொடும்பா டுரையாத மாண்பினிதே
யன்றறிவார் யாரென் றடைக்கலம் வெளவாத
நன்றியி னன்கினிய தில்.

ப-ரை. நன்றி - ஒருவர்செய்த உதவியின், பயன் - பிரயோசனத்தை, தூக்கி - ஆராய்ந்து, வாழ்தல் - வாழ்ந்திருத்தல், நனி

இனிது - மிகவுமினிதாகும்; மன்றம் - சபையிலிருந்து, கொடும்பாடு உரையாத-ஒருதலைவழக்குப் பேசாத, மாண்பு-மாட்சிமை, இனிது - இனிதாகும்; அன்று - (வைத்த) அப்பொழுது, அறிவாரியார் என்று- அறிபவர் யாரென்று, அடைக்கலம் - ஒருவன் அடைக்கலமாக வைத்தபொருளை, வெளவாத - கவர்ந்துகொள்ளாத, நன்றியின் நன்கு - நன்மையினும் நன்மையாகிய, இனியது இல் - இனிதாவது வேறொன்றுமில்லை, எ - று.

க-ரை. ஒருவர் செய்த வுதவிப்பயனை மறவாது வாழ்தலும், சபையிலிருந்து ஒருதலைவழக்குப் பேசாத பெருமையும், வைத்தபோ தறிவாரில்லையென்று ஒருவன் வைத்த அடைக்கலப் பொருளைக் கவர்ந்துகொள்ளாமையும் இனியவென்பதாம்.

வி-ரை. நன்றி-நன்மை (உதவி). தூக்கல் - ஆராய்தல். கொடு ம்பாடு - கொடுமை, (ஒருதலைவழக்குப் பேசுதல்). அடைக்கலம் - ஒருவன் கொண்டுவந்து ஒளித்துவைத்தபொருள். (௩0)

அடைந்தார் துயர்கூரா வாற்ற லினிதே
கடங்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்வியா ராயினு மாராய்ந்
தறிந் துரைத்த லாற்ற வினிது.

ப-ரை. அடைந்தார்-தம்மை யடுத்தவர், துயர் கூரா - துன்பப் படாமைக் கேதுவாகிய, ஆற்றல் - செய்கையுடைத்தாதல், இனிது - இனிதாகும்; கடம் கொண்டும் - கடன் வாங்கியாயினும், செயவன - செய்யத்தகுந்த காரியங்களை, செய்தல் - செய்தலானது, இனிது - இனிதாகும்; சிறந்து அமைந்த - மிகவும் நிறைந்த, கேள்வியர் ஆயி னும் - கேள்வியுடையராயினும், ஆராய்ந்து அறிந்து - பலவகையா லும் ஒரு காரியத்தை ஆலோசித்து இதுவே சரியென்று தெரிந்து கொண்டு, உரைத்தல் - சொல்லுதல், ஆற்றஇனிது-மிகஇனிதாகும், எ-று.

க - ரை. தம்மை யடுத்தவரது துன்பத்தை யொழித்தலும், கடன்வாங்கியுஞ் செய்யவேண்டுவனவற்றைச் செய்தலும், மிகச்சிறந்த கேள்வியாயிருப்பினும் யாதொரு காரியத்தையும் பலவகையாலு மாராய்ந்து சொல்லுதலும் இனியவென்பதாம்.

வி - ரை. துயர்கூரா என்பதற்கு துன்பப்படாமைக் கேதுவாகிய காரியங்கள் என்றுரைப்பினுமாம், அவை அவர்கட்கு வேண்டுவன வுதவிக்காப்பாற்றல். செய்வன செய்தல் - தவறுமற் செய்யத் தகுந்த காரியங்களைச் செய்தேவிடுதல். செய்யத்தகுந்த காரியங்களாவன: இருமுது குரவருடைய சிரார்த்தாதிகளும், மற்றுஞ் செய்யவேண்டிய உபவாசாதிகளும். (௩௧)

கற்றறிந்தார் கூறுங் கருமப்பொருளினிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே
தெற்றென லின்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்
பற்றிமையிற் பாங்கினிய தில்.

ப - ரை. கற்று - பலநூல்களையுங் கற்று, அறிந்தார் - அவற்றினுட்பொருளை யறிந்தவர், கூறும் - சொல்லுகிற, கருமப்பொருள் - உறுதிப் பொருளானது, இனிது-இனிதாகும்; பற்று அமையா-குடிகளிடத்து அன்பில்லாத, வேந்தன் கீழ் - அரசனது குடையின்கீழ், வாழாமை - வாழாத தன்மையானது, முன் இனிது - மிகவுமினிதாகும்; தெற்றெனல் இன்றி - வறுமையால் தெளிவுகுன்றி, தெளிந்தாரை - தம்மை யாதரிப்பவரென்று தேர்ந்தடைந்தவரை, தீங்கூக்கா - தீங்குசெய்ய நினையாத, பற்றிமையின் - அன்புடைமையினும், பாங்கு இனியது - மிகவுமினியது, இல் - வேறொன்றுமில்லை, எ - று.

க - ரை. அறிவு நூல்களைக் கற்றறிந்தவர் சொல்லும் உறுதிப் பொருளும், குடிகளிடத் தன்பில்லாத அரசன்கீழ் வாழாமையும்,

வறுமையாற் றளர்ந்து தம்மை வந்தடைந்தவரை அன்போடு காப்பா ற்றுதலும் இனியவென்பதாம்.

வி - ரை. உறுதிப்பொருள் கூறுவோராதலால் அவர் கற்றநூல் கள் அறிவு நூல்களென்பது தானேபெறப்பட்டது. பற்று - அன்பு. வேந்தன்கீழ் என்றது வேந்தனதுகுடைநிழலின்கீழ் என்றபடி. தெற் றெனல் - தெளிவாயிருத்தல். ஊக்கல் - செய்தல். பற்றிமை - அன் புடையராந் தன்மை. (௩௨)

ஊர்முனிவ செய்தொழுகா வூக்க மிகவினிதே
தானே மடிந்திராத் தாளாண்மை முன்னினிதே
வாண்மயங்கு மண்டமருண் மாறு மறமன்னர்
தானை தடுத்த லினிது.

ப - ரை. ஊர் - ஊரிலுள்ளார், முனிவ - வெறுக்கத்தக்க தீச் செயல்களை, செய்து ஒழுகா - செய்து அத்தீநெறிக்கண்ணே யொழு காத, ஊக்கம்-மனவுறுதி, மிக இனிது-மிகவு மினிதாகும்; தானே - வேறொரு தடையின்றித் தனக்குத்தானே, மடிந்து இரா - சோம்பி யிராத, தாளாண்மை - முயற்சியானது, முன் இனிது - மிகவுமினி தாகும்; வாள் - வாளாயுதங்கள், மயங்கு-நெருங்கிக்கலக்கிற, மண்டு அமருள் - மூண்டபோரினின்றும், மாறு - மீளாத, மற மன்னர் - வீரத்தையுடைய அரசரது, தானை - சேனையை, தடுத்தல் - விலக்கு தல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. ஊரிலுள்ளார் வெறுத்தற்குரிய தீச் செயல்களைச் செய் யாமையும், சோம்பியிராமல் முயற்சியோடிருத்தலும், இருவேந்தரது பகை தணித்தலும் இனியவென்பதாம்.

வி - ரை. ஊர் என்றது ஊரிலுள்ளாரை யாதலால் இடவாகு பெயர். மடிதல் - சோம்பியிருத்தல். மயங்குதல் - கலத்தல். அமர் - சண்டை. மறமன்னர் தானை தடுத்தலாவது - அரசரிருவர் பகை

கொண்டு போர்செய்யுங்கால் அவ்விருவர்க்கிடையே சென்று போரை விலக்கி அவரைச் சமாதானப்படுத்தல். (கக)

எல்லியம் போது வழங்காமை முன்னினிதே [தே
சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதன் மாண்பினி
புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுத லினிது.

ப - ரை. எல்லிய போது - இராக்காலத்தில், வழங்காமை-சஞ்சரியாதிருத்தல், முன் இனிது-மிகவுமினிதாகும்; சொல்லுங்கால் - (ஒன்றைச்) சொல்லுமிடத்து, சோர்வு இன்றி - மறப்பில்லாமல், சொல்லுதல் - சொல்லுதலினது, மாண்பு - மாட்சிமை, இனிது - இனிதாகும்; புல்லிக்கொளினும்-வலியவந்து தழுவிக்கொண்டாலும், பொருள் அல்லார் - ஒரு பொருளாக மதிக்கப்படாதவராகிய கீழ்களது, கேண்மை - சிநேகத்தை, கொள்ளா - ஏற்றுக்கொள்ளாமல், விடுதல் - விட்டொழிதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. இராக்காலத்தில் வெளியில் சஞ்சரிக்காதிருத்தலும், ஒன்றைப் பேசும்போது முன்பின் செய்திகளை மறவாமற் பேசுதலும், வலியவந்து தழுவிக்கொண்டாலும் கீழ்களது சிநேகத்தைக் கொள்ளாது விடுதலும் இனியவென்பதாம்.

வி - ரை. எல்லி-இராத்திரிவழங்குதல்-சஞ்சரித்தல். சோர்வு-மறதி. புல்லுதல் - தழுவுதல். பொருளல்லார்-ஒரு பொருட்டன்மையுடைய ரல்லாதவர் (ஒன்றுக்கும் பற்றாதவர்). கேண்மை - கேளாந்தன்மை, (சிநேகம்). கொள்ளாது விடுதல் என்பது கொள்ளா விடுதல் என நிலைமொழியீறு தொகுத்தல் பெற்றது. (கச)

ஒற்றினா லொற்றிப் பொருடெரியு மாண்பினிதே
முற்றான் றெரிந்து முறைசெய்தன் முன்னினிதே

பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்தூற்றுப் பாங்கறிதல்
வெற்றிவேல் வேந்தற் கினிது.

ப - ரை. ஒற்றினால்-ஒற்றரைக்கொண்டு, ஒற்றி-புறத்தே நிகழுஞ் செயல்களை யறிந்து, பொருள் - உண்மைப்பொருளை, தெரியும் - தெரிந்து செய்கிற, மாண்பு - மாட்சிமை, இனிது - இனிதாகும்; முன் - (ஒருகாரியத்தைச் செய்தற்கு) முன்பே, தான் தெரிந்து - தான் ஆராயவேண்டுவனவற்றை ஆராய்ந்தறிந்து, முறைசெய்தல் - செய்யவேண்டிய கிரமப்படியே செய்தல், முன் இனிது - மிகவுமினிதாகும்; பற்று இலன் ஆய் - ஒருவர்மீது பற்றில்லாதவனாகி, பல் உயிர்க்கும் - பல வுயிர்களுக்கும், பாத்தூற்று - இரங்கி, பாங்கு அறிதல்-நன்மையை யறிதல், வெற்றி வேல் - வெற்றிவேலைத் தாங்கிய, வேந்தற்கு - அரசனுக்கு, இனிது - இனிதாம், எ - று.

க - ரை. ஒற்றரைக்கொண்டு புறத்து நிகழுஞ் செய்திகளைத் தெரிந்துகொண்டு உண்மை கண்டு அதற்கேற்ப நடத்துதலும், செய்தற்குமுன்னே யாலோசித்துத் தெரிந்துகொண்டு முறைசெய்தலும், பக்ஷபாதமில்லாமல் எல்லாரையு மொப்பநாடுதலும் அரசனுக்குஇனியவா மென்பதாம்.

வி - ரை. ஒற்று - பண்பாகுபெயர். முறைசெய்தல்-செங்கோல் செலுத்தல். பற்று - அன்பு. பாத்தூறல் - இரங்கல். பாங்கு-நன்மை. வெற்றி - சயம். (௩௫)

ஒளவித் தழுக்கா றுரையாமை முன்னினிதே
செவ்வியராய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே
கவ்வித்தாங் கொண்டுதாங் கண்டது காமுற்று
வௌவா விடுத லினிது.

ப - ரை. ஒளவித்து - மனங்கோணி, அழுக்காறு-பொறாமைச் சொற்களை, உரையாமை - சொல்லாமை, முன் இனிது - மிகவுமினி

தாகும்; செவ்வியர் ஆய் - மனச் செப்ப முடையவராய், சினம்-கோப த்தை, செற்று-கோபித்து, கடிந்து-நீக்கி, வாழ்வு-வாழ்தல், இனிது - இனிதாகும்; கவ்விக்கொண்டு - உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, தாம்-தாங்கள், கண்டது - கண்ட பொருளை, காமுற்று - விரும்பி, வௌவா - அதனைக் கவர்ந்துகொள்ளாது, விடுதல் - ஒழிதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. பிறராக்கங்கண்டு பொறாமை பேசாமையும், கோப மில்லாமல் நடுவுநிலை யுள்ளவராயிருத்தலும், பிறர்பொருளைக் கவர்ந்துகொள்ள இச்சியாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. ஔவித்து உரையாமையென வியையும். ஔவித்தல் - மனக்கோட்ட முடையராதல். செற்று என்பதற்குப் பகுதி செறு. கவ்வல் - உறுதியாய்ப்பற்றல். வௌவாது என்பது வௌவா என ஈறுதொகுத்த லாயிற்று. வௌவல் - கவர்தல். (உக)

இளமையை மூப்பென் றுணர்த லினிதே
கிளைஞர்மாட் டச்சின்மை கேட்ட லினிதே
தடமென் பணைத்தோட் டளிரிய லாரை
விடமென் றுணர்த லினிது.

ப - ரை. இளமையை - ஒருவன் தன் இளமைப்பருவத்தை, மூப்பு என்று-முதுமைப்பருவமென்று, உணர்தல்-அறிதல், இனிது-இனிதாகும்; கிளைஞர் மாட்டு - உறவினரிடத்து, அச்சு இன்மை - அஞ்சுதற் கேதுவாகிய துன்பமில்லாமையை, கேட்டல் - கேட்குதல், இனிது - இனிதாகும்; தடம் மென்பணை தோள்-பெரிய மெல்லிய பருத்ததோள்களையும், தளிர் இயலாரை - தளிர்போன்ற சாயலையும் உடையமாதரை, விடம் என்று உணர்தல்-விஷமென்றறிதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. ஒருவன் தனது இளமைப்பருவத்தை முதுமைப்பரு வமாக நினைத்தலும், உறவினரது க்ஷேமத்தைக்கேட்டலும், மாதரை நஞ்சென்றறிதலும் இனியவென்பதாம்.

வி - ரை. இளமை நீரிற்குமிழி போல்வதாதலால் 'இளமையை மூப்பென்றுணர்தலினிது' என்றும், உறவினர் நிர்ப்பயராய் வாழ் தலைக் கேட்டல் ஒருவனுக் கின்பந்தருவதாதலால் 'கிளைஞர்மாட்டச் சின்மை கேட்டலினிது' என்றும், ஆடவரைக் கொல்லுதற் கமைந்த வராதலால், 'தடமென்பணைத் தோட்டளிரிய லாரைவிடமென்றுண ர்தலினிது' என்றும் கூறினர். மூப்பு - தொழிலாகுபெயர்; மூ - பகுதி. அஞ்சு - முதனிலைத்தொழிற்பெயர்; அது அச்சு என வலித் தல்பெற்றது. பணைத்தோள் - மூங்கில்போலுந் தோள் எனினுமமை யும். இயல் - சாயல் (நிறம்). (கஎ)

சிற்றா ளுடையான் படைக்கல மாண்பினிதே
நட்டா ருடையான் பகையாண்மை முன்னினிதே
யெத்துணையு மாற்ற வினிதென்ப பால்படுங்
கற்றா வுடையான் விருந்து.

ப - ரை. சிற்றாள் உடையான்-சிற்றாளையுடையவனது, படைக் கலம் - ஆயுதம், மாண்பு - மாட்சிமையாக, இனிது - இனிதாகும்; நட்டார் உடையான் - சுற்றத்தாரையுடையவன், பகை ஆண்மை - பகைவரோடு கொள்பகையை யாளுந்தன்மை, முன் இனிது - மிகவு மினிதாகும்; பால்படும் - பால்சொரிகிற, கற்றா உடையான் - கறவற் பசுவையுடையவனது, விருந்து - விருந்தானது, எத்துணையும் - எவ் வகையாலும், ஆற்ற இனிது - மிகவுமினிதாகும், என்ப - என்று சொல்லுவர் பெரியோர், எ - று.

க - ரை. சிற்றாளுடையவனது ஆயுத மாட்சியும், உறவினரது உதவியுள்ளவன் பகைவரோடு பகைக்கு மாண்மையும், கற்றாவுடை யவனிடம் விருந்தும் இனியவென்பதாம்.

வி - ரை. சிற்றான் - சிறுஆள். நட்டார் - சிநேகர் எனினுமாம். ஆண்மை-ஆளுந்தன்மை. கன்று ஆ கற்றா என வலித்தல்பெற்றது; கன்றையுடைய பசு என்பது பொருள் (கறவற்பசு). விருந்து - விருந்துசெய்தல். (கூஅ)

பிச்சைபுக் குண்பான் பிளிறாமை முன்னினிதே
துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே
யுற்ற பேராசை கருதி யறனொரூஉ
மொற்க மிலாமை யினிது.

ப - ரை. பிச்சைபுக்கு உண்பான் - ஐயமேற் றுண்பவன், பிளிறாமை - கோவியாமை, முன் இனிது - மிகவுமினிதாகும்; துச்சில் இருந்து - ஒதுக்குக் குடியாயிருந்து, துயர் கூரா - துன்பப்படாத. மாண்பு-மாட்சிமை, இனிது-இனிதாகும்; உற்ற-மிகுந்த, பேராசை-பெரிதாகிய ஆசையை, கருதி - எண்ணி, அறன் - தருமத்தை, ஒரூஉம் - நீங்குகிற, ஒற்கம் இல்லாமை - மனத்தளர்ச்சி யில்லாமை, இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. ஐயமேற்றுண் டியிர்வாழ்பவன் கோவமில்லாதிருத்தலும், ஒதுக்குக் குடியிருந்து துன்பப்படாமையும், மிகுந்த பேராசையால் அறநெறியைக் கைவிட்டு மனந் தளராதிருத்தலும் இனியவென்பதாம்.

வி - ரை. புக்கு - இறந்தகால வினையெச்சம்; புகு என்னும் பகுதியொற்றிரட்டித்து இறந்தகாலங் காட்டிற்று. பிளிறல் - உறுமுதல்; அது இவ்விடத்துக் கோவித்தலைக் குறித்தது. துச்சில் - ஒதுக்கிடம். ஒற்கம் - தளர்ச்சி; பகுதி ஒல்கு. துயர்கூர்தல் - துன்பமிகுதல் எனினுமாம். (உக)

பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே
வித்துக்குற் றுண்ணா விழுப்ப மிகவினிதே

பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினிய தில்.

ப-ரை. பத்து கொடுத்தும் - பதின்மடங்கதிகமான இறையிறுத்தாயினும், பதி இருந்து வாழ்வு - தன் ஊரிலிருந்துகொண்டு வாழ்தல், இனிது - இனிதாகும்; வித்து - விளைவிற்குக் காரணமாகிய வித்தை. குற்று உண்ணா - குற்றியுண்ணாத, விருப்பம் - மேன்மையானது. மிக இனிது - மிகவு மினிதாகும்; பற்பல நாளும் - பலப்பல நாளும், பழுது இன்றி - பழுது இல்லாமல், பாங்கு உடைய - தகுதியுடைய நூல்களை, கற்றலின் - கற்றலினும், காழ் இனியது - உறுதியாகிய இனியது, இல் - வேறொன்றுமில்லை, எ-று.

க-ரை. பத்துக் கொடுத்தாயினும் தன்னூரிலிருந்தே வாழ்தலும், விதைக்க வைத்திருக்கும் நெல்லைக் குற்றியுண்ணாமையும், எந்நாளும் அறிவுநூல்களைக் கற்றலும் இனியவென்பதாம்.

வி-ரை. பதி-ஊர். வித்து-விதைத்தற்கென் றெடுத்துவைத்த நெல். குற்று குற்றி என்பவற்றிற்குப் பகுதி குறு; இதை:

"கொல்லைக் குறவரை வாயவளை யார்கரிக் கோட்டைவிளை
நெல்லைக் குறவரை யாதுகொள் காளத்தி நேயனை"

"இலைக்குறச் சத்திக்கத்திகோடு பறித்துக்
கொடாதிசிறைப்பிறப்பே"

என்றற்றொடக்கத் தான்றோர் செய்யுட்களா லினிதுவிளங்கும். கற்றலின் என்பதில் இன் ஐந்தாவது உறழ்பொருளில் வந்தது. காழ் - வயிரம்; அது இவ்விடத்து உறுதியென்னும் பொருள் பயந்துநின்றது. பற்பலநாளும் என்றது எந்நாளும் என்றபடி.

இனிது நாற்பது மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

இனிது நாற்பது

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
ஊனைத்தி	25	குழவிதளர்	15
அதர்ச்சென்று	10	சொல்லானை	6
அந்தணரோத்	7	சலவாரை	16
ஆற்றுந்துணை	6	குழவிபிணி	11
ஆற்றானை	23	சிற்றுணடை	31
ஆர்வமுடை	30	தங்கணவர்	9
[illegible]	3	தானங்கொடு	22
[illegible]	8	நச்சித்தற்	21
ஊர்முனி	27	நட்டார்புறங்	16
எல்லாம் [illegible]	28	நன்றிப்பயன்	24
ஏவதுமாறா	4	பத்துக்கொடுத்	32
ஐவாயவேட்கை	20	பிச்சைபுக்காயி	2
[illegible]	28	பிறன்கைப்பொரு	32
ஒளிவித	29	பிறன்மனைப்	17
கடமுண்டு	10	பிறன்மனை	13
[illegible]	1	மன்றின்முது	15
கயவரைக்	24	மானமழிந்த	12
கற்றார்முற்	14	யானையுடைய	5
[illegible]	26	வருவாயறிந்து	18
[illegible]	19	வெல்வது	19